

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்ட பிரதமர் நரேந்திர மோடி அங்கு கூடியிருந்தவர்களை பார்த்து கையசைத்த காட்சி.

# மத்திய அரசு...

(1-ம் பக்க தொடர்ச்சி)



சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில் அர்ஜூன் மார்க்-1 ஏ ரக பீரங்கியை ராணுவ தளபதி நரவானேயிடம் பிரதமர் நரேந்திர மோடி ஒப்படைத்தார். அருகில் கவர்னர் பன்வாரிலால் புரோகித் உள்ளார்.

பட்டுள்ளது.

சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு விமானங்கள் விரைவில் இயக்கப்படவுள்ளன. இந்தியா கட்டியுள்ள யாழ்ப்பாணம் கலாசார மையம் விரைவில் திறக்கப்படும் என்று நம்புகிறேன். இலங்கை தலைவர்களிடம் தமிழர்களின் உரிமைகள் பற்றி நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். தமிழர்கள் சமத்துவம், நீதி, அமைதி, கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்ய நாங்கள் எப்போதும் உறுதி பூண்டுள்ளோம்.

### தமிழக மீனவர்கள் உரிமைகள் பாதுகாக்கப்படும்

நமது மீனவர்கள் நீண்டகால பிரச்சினையை சந்தித்து வருகின்றனர். அவர்களது உரிமைகளை எனது அரசு எப்போதும் பாதுகாக்கும் என்று உறுதி அளிக்கிறேன். இலங்கையில் மீனவர்கள் சிறைப்பிடிக்கப்படும்போதெல்லாம், அவர்களை விரைவாக விடுதலைசெய்வதை நாங்கள் உறுதிப்படுத்தியுள்ளோம்.

1,600-க்கும் மேற்பட்ட மீனவர்கள் எனது ஆட்சிக் காலத்தில் விடுவிக்கப்பட்டுள்ளனர். தற்போது, இலங்கையின் பிடியில் எந்த இந்திய மீனவரும் இல்லை. 313 படகுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள படகுகளை மீட்டுக் கொண்டுவர முயற்சி எடுக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.